**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.</u>**

**<u>MCOP.No. 171/2023</u>**

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04-ம் நாள் புதன்கிழமை **ம.சா.1**-ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டு 54-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளர் திரு. ஆர். கண்ணதாசன் என்பவரால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | பூர்ணவள்ளி | **வட்டம்** | |
| **த.பெ** | | **சமயம்** | |
| **கிராமம்** | | **வயது** | |

**1ம் எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணை**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். இந்த விபத்திற்கு நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் பேருந்து ஓட்டுநர் காரணம் இல்லை. இருசக்கர வாகன ஓட்டி தான் காரணம் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு காவல் துறையினர் இறுதி அறிக்கை தாக்கல் செய்திருக்கிறார்களா என்றால் தெரியாது. விபத்திற்கு என் கணவரின் கவனக்குறைவுதான் காரணம் என்றால் சரியல்ல. நான் கேட்டிருக்கும் இழப்பீடு மிக அதிகமானது என்றால் சரியல்ல. என் கணவருக்கு முறையான வேலையோ வருமானமோ இல்லை என்றால் சரியல்ல. என் கணவரின் தொழில் பற்றி சொல்லியுள்ள விவரம் தவறானது என்றால் சரியல்ல.

**2ம் எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணை**

P PARTHASARATHY

Digitally signed by P PARTHASARATHY
Date: 2026.02.04 13:20:43 +0530

2ம் எதிர்மனுதாரர் என் கணவரின் தாயார் என்றால் சரிதான் . என் மாமியாருடன் உள்ள கருத்து வேறுபாட்டினால் தான் அவரை எதிர்மனுதாரராக சேர்த்து இருக்கிறேன் என்றால் என் கணவர் இறந்தவுடன் வீட்டை விட்டு வெளியே போகச் சொல்லிவிட்டார்.

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2026.02.04 13:20:51 +0530

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2026.02.04 13:20:59 +0530